

# பவுத்திரம்

## Fistula in ano

● டாக்டர்.ஆர்.கண்ணன்
இரைப்பை, குடல், கல்லீரல், லேசர், லேப்ராஸ்கோப்பி மற்றும் குடல் புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர்

### முன்னுரை

ஆசனவாய்ப் பகுதியில் எந்தப் பிரச்சனை வந்தாலும் எல்லோரும் மூலம் என்றுதான் நினைப்பர். ஆனால், பவுத்திரம் மற்றும் ஆசனவாய் வெடிப்பு (Fissure in ano) போன்றவையும் முக்கியமானவை. பவுத்திரம் என்றால் என்ன? ஏன் ஏற்படுகிறது. சிகிச்சை முறைகள் என்ன? என்பதை பற்றி இங்கு விரிவாகக் காண்போம்.

### பவுத்திரம் என்றால் என்ன?

ஆசனவாய்ப் பகுதியில் ஆசனவாய் சுரப்பிகள் (Anal Glands) உள்ளன. பல காரணங்களால் இதில் நோய்தொற்று (Infection) ஏற்பட்டால் சீழ்க்கட்டி ஏற்படும். இதை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சரிசெய்யாவிட்டால், சீழ்க்கட்டியானது ஆசனவாயின் உட்புறம் மற்றும் வெளிப்புறத்தில் பரவி சீழ் வடியும். இதனையே பவுத்திரம் என்கிறோம்.

இதனை எளிதாக ஆசனவாய்க்கும், ஆசன வாயின் வெளியே உள்ள தோலுக்கும் இடையே உள்ள துளை என்றும் புரிந்து கொள்ளலாம். பவுத்திரம் என்ற சொல் சமஸ்கிருதச் சொல்லாகும். சமஸ்கிரதத்தில் பவத் என்றால் துளை என்று பொருள். புரையோடி சீழ் உண்டாகி துளை உண்டாவதால் தான் இதனை பவுத்திரம் (Fistula in ano) என்கிறோம்.

### காரணங்கள்

1. நோய்த்தொற்று (Infection)
2. மலச்சிக்கல்
3. ஆசனவாய் பகுதியில் சீழ்க்கட்டி
4. குடல்பகுதி காசநோய்
5. குடல் புண் (Crohn's Disease)
6. மலக்குடல் புற்றுநோய்

போன்றவை முக்கியமான காரணங்களாகும்.


### பவுத்திரம் எவ்வாறு உண்டாகிறது?


ஆசனவாய்ப் பகுதியில் மேற்கூறிய ஏதேனும் ஒரு காரணத்தினால் சீழ்க்கட்டி உருவாகி, உடைந்து ஆறியபிறகும் காயமானது ஆசனவாய் சுரப்பியுடன் (Anal Gland) தொடர்பு கொண்டிருக்கும் போது நோய்த் தொற்றுகள் (Infection) சுரப்பியை பாதித்து உட்புறமாகவே சீழ்க்கட்டியை உண்டாக்கியிருக்கும். இதனால் வெளிப்புறத்தில் எந்த அறிகுறிகளும் தெரியாவிட்டாலும் உட்புறமாக புரையோடி சீழ் கசிந்து கொண்டிருக்கும். இந்த இடத்தில் இருந்து சீழ் ஒழுகிக் கொண்டே இருப்பதால் புண் ஆறாமல் பரவிக் கொண்டே இருக்கும். பின்னர் இது ஆசனவாய்க்கு வெளியே தோல் பகுதியில் பரவி சீழ் வடியும். ஒரு சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட துளைகள் ஏற்படும். இவ்வாறு பவுத்திரம் உண்டாகிறது.

சில சமயங்களில் பவுத்திரம் தானாக ஆறி மூடினாலும் சில மாதங்கள் கழித்து மீண்டும் சீழ்ப்பிடித்துத் திரும்ப உண்டாகி மறுபடியும் சீழானது பவுத்திர துளை வழியாக வெளிவரும். பொதுவாக இந்த மாதிரியான சமயங்களில் வலி இருக்காது. ஆனால், புரை மூடிக்கொண்டால், சீழ் வலியைத் தோற்றுவிக்கும். ஒரு சிலருக்கு காய்ச்சல் கூட வரும்.

### அறிகுறிகள்

1. ஆசனவாய் பகுதியில் தொடர்ந்து சீழ்வடிதல்
2. வலி
3. ஆசனவாய் பகுதியில் புண்



4. வீக்கத்துடன் கூடிய வலி மற்றும்

5. சில சமயங்களில் காய்ச்சல் ஏற்படும்.


மேற்கண்டவை பவுத்திரத்திற்கான முக்கியமான அறிகுறிகள் ஆகும்.


**எவ்வாறு நாம் அறிந்துக் கொள்வது?**

பாதிக்கப்பட்ட ஆசனவாய்ப் பகுதியில் சீழ்க்கட்டி இருந்தால் வலிக்கும். வீக்கம், புண் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதி சிவந்து தடித்திருக்கும். பவுத்தரம் பெரியதாக இருந்தால் அதன் முனையில் திறப்பு ஏற்பட்டிருக்கும். இதனை பல பரிசோதனைகள் மூலம் கண்டறியலாம். பவுத்திரம் ஆசனவாயில் எவ்வளவு தூரம் எவ்வளவு ஆழமாக பரவியுள்ளது மற்றும் எந்த கோணத்தில் எந்த இடத்தில் பரவியுள்ளது என்பதை கண்டறிவோம்.

பவுத்திரத்தை கீழ்க்கண்ட பரிசோதனைகள் மூலம் கண்டறியலாம்

**1. விரல் பரிசோதனை :** ஆசனவாயின் உள்பகுதியில் ஆள்காட்டி விரலை மருத்துவராகிய நாங்கள் உள்செலுத்தி அதன் தன்மையை கண்டறிவோம்.




***2. Anoscope / Protoscope*** கருவியை ஆசனவாயின் உட்பகுதியில் செலுத்தி அதன் தன்மையை கண்டுபிடிக்கலாம்.

***3. Fistulogram / CT Scan*** - மூலமும் பவுத்திரத்தின் தன்மையை கண்டுபிடிக்கலாம்.

***4. MRI Fistulo Gram*** - பவுத்திரத்தை இந்த பரிசோதனை மூலம், மிகத் தெளிவாக ஆசனவாயில் எந்த இடத்திலிருந்து எவ்வளவு தூரம், எந்த கோணத்தில் எவ்வளவு நீளத்திற்கு எப்படி பரவியுள்ளது என்பதை தெளிவாக தெரிந்துக் கொள்ளலாம். கீழ் நிலை பவுத்திரமா (*Low anal Fistula*) மேல் நிலை பவுத்திரமா (*High anal fistula*) என்பதை கண்டறியலாம்.

இது மிக முக்கியமாக பரிசோதனை ஆகும். பெரும்பாலும் அறுவை சிகிச்சை இந்தப் பரிசோதனையைப் பொறுத்தே முடிவு செய்யப்படுகிறது.

**பவுத்திரம் வகைகள்**

1. கீழ் நிலை பவுத்திரம் (*Low anal fistula*)

2. மேல் நிலை பவுத்திரம் (*High anal fistula*)

3. *Horseshoe* பவுத்திரம்

**சிகிச்சை முறை**

கீழ்நிலை பவுத்திரத்திற்கு (*Low anal fistula*) ஒரு முறை அறுவை சிகிச்சை செய்தே சரிசெய்து விடலாம். ஆனால் மேல்நிலைப் பவுத்திரத்திற்கு (*High anal fistula*) பல சமயங்களில் இரண்டு முறை அறுவை சிகிச்சை தேவைப்படும். நாம் இதனைப் பற்றிக் கீழே தெளிவாக தெரிந்துக் கொள்ளலாம். அறுவை சிகிச்சை சாதாரண முறையிலும், லேசர் முறையிலும் செய்யலாம்.

**அறுவை சிகிச்சை**

பவுத்திரத்திற்கு அறுவை சிகிச்சை தேவையில்லை என பல விளம்பரங்களை நாம் பார்த்திருப்போம். அதில் உண்மை இல்லை பவுத்திரத்தை மருந்தால் குணப்படுத்திவிடுகிறோம் என்பார்கள் ஆனால், குணப்படுத்த முடியாது.

அறுவை சிகிச்சை தான் ஒரே வழி. இதில் பலமுறைகள் உள்ளன.

பவுத்திரத்தின் தன்மையைப் பொறுத்து (நீளம், உயரம், ஒன்றுக்கு மேற்பட்ட துளைகள்) அறுவை சிகிச்சை மாறுபடும்.

## அறுவை சிகிச்சை முறைகள்

**1.சீழ்கட்டி அகற்றுதல் :**

இந்த முறையில் ஆசனவாய்ப் பகுதியில் உள்ள கட்டியில் இருந்து சீழை முற்றிலுமாக அகற்றிவிட்டு, பிறகு சிலவாரங்கள் கழித்து பவுத்திரத்தை முற்றிலுமாக அகற்ற வேண்டும். சில சமயங்களில் சீழ் கட்டி, பவுத்திரம் இரண்டையும் ஒரே அறுவைசிகிச்சையிலும் சரிசெய்து விடலாம்.

**2.Fistulotomy :**

இந்த வகை அறுவை சிகிச்சையில் பவுத்திரமும் முழுவதுமாக திறக்கப்பட்டு (Open) சரிசெய்யப்படுகிறது.

**3.Fistulectomy :**

பெரும்பாலும் பவுத்திரத்திற்கு இந்த முறையில் தான் அறுவை சிகிச்சை செய்கிறோம். இதில் பவுத்திரம் முழுவதுமாக அகற்றப்படுகிறது. இதனால் மீண்டும் பவுத்திரம் வருவதற்கான வாய்ப்புகள் இல்லை.

**4.Seton’s Knot :**

இந்த வகை அறுவை சிகிச்சையில் பவுத்திரம் மிக நீளமாக (High anal fistula) இருக்கும் போது, கீழ்ப்பகுதியில் உள்ள பவுத்திரம் அகற்றப்பட்டு (Stage I Fistulectomy) மேற்பகுதியில் உள்ள பவுத்திரத்திற்கு நூலைக் (Seton) கட்டி வைக்க வேண்டும். பிறகு 6 வாரம் முதல் 3 மாதம் கழித்து Seton Knot-ஐ அடையாளமாகக் கொண்டு மீதியுள்ள பவுத்திரம் முழுவதுமாக அகற்றப்படும் (Stage II Fistulectomy) பொதுவாக இந்த முறை மேல்நிலைப் பவுத்திரத்திற்கு (High anal fistula) சிறந்த அறுவை சிகிச்சையாகும்.

**VAAFT**

இது புதிய முறை அறுவை சிகிச்சையாகும். இந்த முறையில் வீடியோ கருவி உதவியுடன் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

**Fistula Plug :**

இந்த முறையில் பவுத்திரத்திற்கு உள் Fistula Plug பொறுத்தி பவுத்திரத்தை குணப்படுத்தலாம்.

**அறுவை சிகிச்சைக்குப் பிறகு கடைபிடிக்க வேண்டியவை :**

1.தினந்தோறும் மருந்துபோட்டு சுத்தம் செய்ய வேண்டும்.

2.வலிக்கு வலிநிவாரண மருந்துகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

3.Antibiotic மருந்துகள் எடுத்து நோய்த்தொற்றை (Infection) சரிசெய்ய வேண்டும்.

4.மருத்துவரின் ஆலோசனைப் படி, முறையான சிகிச்சை பின்பற்ற வேண்டும்.

5.சர்க்கரை நோயை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும்.

6.தினந்தோறும் கட்டு போட்டு (Dressing) சரிசெய்ய வேண்டும்.

## மீண்டும் வராமல் தடுக்க

1.அறுவை சிகிச்சைக்குப் பிறகு மருந்துவரை குறித்த காலத்தில் பார்க்காமல் விட்டாலோ

2.சரிவர மருந்து போடாமல் விட்டாலோ

3.ஆசனவாய்ப் பகுதியை சுத்தமாக வைக்காமல் விட்டாலோ

4. மலச்சிக்கலை சரிசெய்யாவிட்டாலோ மற்றும்

5. முறையற்ற சிகிச்சை மூலமாகவும் மீண்டும் பவுத்திரம் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

பொதுவாக அறுவை சிகிச்சை செய்து கொண்டால் மலம் கழிக்கும் போது கட்டுப்பாடு இல்லாமல் போகும் என்ற பயத்திலேயே நிறைய பேர் பவுத்திரத்திற்கு அறுவை சிகிச்சைதான் தீர்வு என்று தெரிந்தும் அறுவை சிகிச்சை செய்து கொள்ள மாட்டார்கள். ஆனால் மேற்கூறிய பரிசோதனைகளை செய்து எந்த வகை பவுத்திரம் என்று வகைப்படுத்தி தகுந்த அறுவை சிகிச்சை செய்து கொண்டால் எந்த பக்கவிளைவுகளும் ஏற்படாது. எனவே குறித்த காலத்தில் தகுந்த அறுவை சிகிச்சை செய்து கொள்வதுதான் சாலச்சிறந்தது.


Prime Indian Hospitals
Changing Lives...

1051, Poonamallee High Road,
Arumbakkam, Chennai-600 106
Ph : 91-44-2363 9999, 91 98844 93140
Email: *primeindianhospital@gmail.com*

Life Care
DKJ Hospital
CARE... with love

177/3, M.T.H. Road, Villivakkam, Chennai - 49.
Ph : 044-26180099, 044-43577755,
8754590905
email: *chennaigastro@gmail.com*
Web: www.chennaigastro.com
www.chennaigastroenterlogist.com